திரு. ஆ. இராஜேந்திரன்: முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன். ஆக, இவ்வளவு நலத் திட்டங்களை வழங்கியபோதும், இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், இந்த அரசு பட்டை நாமம் போடக்கூடிய அரசு என்று சொல்லக்கூடியவர்கள், பேசக்கூடியவர்கள்தான் இன்றைக்குப் பட்டை நாமம் போடக்கூடியவர்களாக இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த நாட்டு மக்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும், அதையடுத்து உள்ளாட்சி அமைப்புத் தேர்தலிலும் அவர்களுக்குப் பட்டை நாமம் போட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒரு தாயின் பிரசவ வேதனையைப்போல, அனைத்து வரிகளையும் இந்த அரசின் முதலமைச்சரே ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு ஒரு வரியில்லாத பட்ஜெட்டை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த பட்ஜெட்டைப் பாராட்டுவதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. வேல்முருகன் அவர்கள் உரையாற்றும்போது ** என்கிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். ** என்கிற அந்த வார்த்தையை ஆதி திராவிடர் என்று மாற்றி அமைத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடிந்துவிட்டது.

பிற்பகல் 12–15

4. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9–4–2007 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை 10–4–2007 செவ்வாய்க்கிழமை அன்றும், 10–4–2007 செவ்வாய்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை 9–4–2007 திங்கட்கிழமை அன்றும் எடுத்துக்கொள்ளப்படும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதேபோன்று, 7–5–2007 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியவை 8–5–2007 செவ்வாய்க்கிழமை அன்றும், 8–5–2007 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை), மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகியவை 7–5–2007 திங்கட்கிழமை அன்றும் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்— தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது விவாதம் தொடர்கிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

***திருமதி பெ. கமலாம்பாள்:** ஐந்தாவது முறையாக அரியணை ஏறிய, அஞ்சுகம் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களே, இந்தப் பேரவையிலே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெண் விடுதலைக்குப் போராடுகின்ற பெண் உரிமைக் காவலர், சமூக நீதிப் போராளி, மலை குலைந்தாலும் நிலை குலையாத மக்கள் காவலர், பெண் உரிமைக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தியாகச் செம்மல், தலைவர் கோ.க. மணி அவர்களே, உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)

மக்கள் தொகையிலும், வாக்கு உரிமையிலும் சரிபாதியாக உள்ளவர்கள் பெண்கள்.

"மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அன்று பாடியுள்ளார். இப்படிப் பெண்களைப் போற்றினார்கள். அது மட்டுமல்ல, நாம்